# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி

## அ.வ.எண்.32/2019

இந்நீதிமன்ற எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பு 3ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2026 ஆண்டு ஜனவரி மாதம் 27 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : செல்வராஜ் | மதம் | : இந்து |
| த/பெ | : கோவிந்தன் | ஜாதி | : -- |
| வயது | : 70 | கிராமம் | : லட்சுமிவிலாசபுரம் |
| தொழில் | : விவசாயம் | வட்டம் | : திருத்தணி |

**27.01.2026**
**பி.வா.சா. 3 திரும்ப அழைப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. எனக்கு நீதிமன்றத்தில் இருந்து சாட்சி சொல்ல அழைப்பாணை வந்ததா என்றால் இல்லை. என்னை சாட்சி சொல்ல யார் அழைத்து வந்தார் என்றால் யோவான் அழைத்து வந்தார். யோவான் எனக்கு எப்படி பழக்கம் என்றால் அவர் எனது அத்தை மகன் ஆவார். தாவா சொத்து புல எண் தெரியுமா என்றால் புல எண்.84/12 ஆகும். அதன் மொத்தம் விஸ்தீரணம் 10 செண்டா என்றால் 12 செண்ட் ஆகும். தாவா சொத்து பர்ணபாஸ் பட்டா இருந்தது என்றால் தெரியாது. தாவா சொத்தில் யோவானுக்கு பட்டா உள்ளதா என்றால் இல்லை. தாவா சொத்தில் தெரு பக்கம் பர்ணபாஸ் மனைவி, அவரது மகன்கள் 2 வீடு கட்டி குடியிருந்து வருகிறார்கள் என்றால் ஆமாம். அந்த 2 வீடுகள் கட்டியதால் பின்புறம் இருந்து வருவதற்கு வழியில்லை என்றால் ஒரு வீடு கட்டும்போது வழி இருந்தது. தற்போது வழி இல்லை. தாவா சொத்திற்கு அருகில் எனக்கு ஏதாவது வீடு உள்ளதா என்றால் இல்லை.

2. என் வீடு எங்குள்ளது என்றால் கிழக்கு பக்கமாக உள்ளது. தாவா சொத்து யார் யாருக்கு சொந்தம் என்றால் அமாவாசையின் மகனான முருகனின் மகன் யோவான், போலாரின் மகனான எட்டியின் மகன்களான ஆசிர்வாதம், சாமுவேல், ரூட்டு குள்ளன் மக்களான அண்ணாமலை, யாகோப், சாரதா, ஜெயா, நைனாவின் மகன்களான பொத்தாலி, பரஞ்சோதி ஆகியோர்களுக்கு சொந்தம். மேற்படி நபர்களுக்கு வழக்கு

சொந்தம் என்பதை காட்ட ஆவணம் எதாவது உள்ளதா என்றால் நான் பார்க்கவில்லை. வாய்மொழி கிரையம் என்று சொல்வதில் யோவான் யாரிடன் வாய்மொழி கிரையம் வாங்கினார் என்றால் சாமுவேலிடமிருந்து வாங்கினார். என்ன தொகைக்கு அவர் கிரையம் வாங்கினார் என்றால் அந்த விவரம் தெரியாது. யோவான் கிரையம் வாங்கும்போது நான் அங்கிருந்தேனா என்றால் நான் அங்கில்லை.

3. யார் சொல்லி யோவான் கிரையம் வாங்கிய விவரம் எனக்கு தெரியும் என்றால் சாமுவேலின் மகன் சின்னதுரை சொல்லி தெரியும். எனது பிரமாண வாக்குமூலத்தில் பத்தி 5ல் தாவா சொத்தில் யோவான் 2018ல் வீடு கட்டும்போது சீதா மற்றும் அவரை சார்ந்தவர்கள் யாரும் தடை செய்யவில்லை என கூறியுள்ளதில் நான் அங்கிருந்தேனா என்றால் நான்தான் அளந்து கொடுத்தேன். யாருக்கு எந்த பக்கம் சொத்து சொந்தம் என்பதற்கு எந்த ஆவணமும் இல்லை என்றால் சரிதான். எந்த அடிப்படையில் சொத்தை அளந்து கொடுத்தேன் என்றால் அனுபவத்தை வைத்துதான் அளந்து கொடுத்தேன். நான் சொல்லும் 4 பங்கின் அனுபவம் கிழமேலாக இருந்ததா தென்வடலாக இருந்ததா என்றால் வடக்கு தெற்காக இருந்தது.

4. வழக்கு சொத்து அருகில் தெரு கிழமேலாக உள்ளது என்றால் ஆமாம். தெருவிற்கு நேராக வடக்கு தெற்காக அனுபவிக்கிறார்களா என்றால் தெருவை ஒட்டி இரண்டு வீடுகள் உள்ளது. இரண்டு வீடுகளுக்கு பின்னால்தான் காலி மனையாக உள்ளது. அந்த காலிமனையைதான் வடக்கு தெற்காக அனுபவிக்கிறார்கள். யோவான் சாமுவேலுக்கு 4 செண்ட் கொடுத்துள்ளதாக சொல்வதில் அந்த 4 செண்டின் நான்கு எல்லை தெரியுமா என்றால் கிழக்கே புகழேந்தி நிலம், மேற்கே யோவான், வடக்கே யோவான், சாமுவேலின் காலி மனை, தெற்கே அமலதாஸ் வீடு ஆகும். யோவான் தந்தைக்கு 4 செண்ட் இருப்பதாக சொல்வதில் அது எங்கு உள்ளது என்றால் சாமுவேல் வாங்கிய மனைக்கு மேற்கே உள்ளது. அதற்கு மேற்கே யார் உள்ளார் என்றால் அண்ணாமலை உள்ளார்.

5. தெரு பக்கம் யார் உள்ளார் என்றால் பர்ணபாஸின் பிள்ளைகளின் 2 வீடு உள்ளது. பர்ணபாஸ் வீட்டிற்கு பின்னால் யார் மனை உள்ளது என்றால் பர்ணபாஸ் வீட்டிற்கு பின்னால் காலி மனையே இல்லை. சீதா வீடு கட்டியுள்ள இடத்திற்கு எந்த பக்கம் சாமுவேல் உள்ளார் என்றால் சீதா வீட்டிற்கு வடக்கே சாமுவேல் உள்ளார். அதற்கும் வடக்கே யோவான் உள்ளாரா என்றால் வடக்கு பக்கம் மேற்கே யோவான்

உள்ளார். கிழக்கே சாமுவேல் உள்ளார். அந்த இடத்தில் மொத்தம் கிழக்கு மேற்கு 72 அடி இருந்தது. அதை நான்கு பங்காக பிரித்து ஆளுக்கு 18 அடிகளாக பிரித்தோம். வடக்கு தெற்கு 100 அடிகளாகும்.

6. சீதா வீட்டிற்கு பின்னால் யோவான் வீடு உள்ளதா என்றால் அமலதாஸ் வீட்டிற்கு பின்னால் உள்ளது. வீடு கட்டும்போது சீதாவும் அவரது பிள்ளைகளும் யோவான் மீது காவல் துறையில் புகார் கொடுத்தார்கள் என்றால் இல்லை. நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் தாவா சொத்தில் யோவானுக்கு எந்த உரிமையும் இல்லை என்றாலும் பர்ணபாஸின் சொந்த சொத்து என்றாலும் அவருக்கு அரசாங்கத்தில் இருந்து பட்டா கொடுக்கப்பட்ட சொத்து என்றாலும் சரியல்ல. நான் யோவானின் உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

(மறு விசாரணை இல்லை)